**ரத்கம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 17 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, ரத்கம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 05 நிரந்தர வைப்புக் கணக்குகளின் வட்டியினை கணித்துக் காட்டியிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு செலுத்தபட வேண்டிய ரூபா 13,443,513 இற்கான பங்களிப்பு தொகையினைக் கணக்கீடு செய்திருக்காமையால் செலவுகள் மற்றும் செலுத்த வேண்டிய மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஒன்றிற்கு ஒன்று சமப்பட வேண்டிய நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன செலவிடிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கின் மீதிகளிடையே ரூபா 3,401,225 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஈ) மீளாய்வண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கில், வருமான உதவி ரூபா 342,276 தொகை மற்றும் மூலதன உதவி ரூபா 50,397 தொகை குறைவாகவும், வழங்கல் மற்றும் உபகரண செலவுகள் ரூபா 23,496 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தமையால் இலாபம் ரூபா 416,169 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 41,318 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் அதே தொகையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களுக்கான முதலீட்டு பெறுமதி ரூபா 1,098,555 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் நீர் வழங்கல் உபகரண தொகையின் பெறுமதி ரூபா 234,633 தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான இருப்பு ஒன்று பதிவு செய்யப்பட்டு அல்லது பௌதீக ரீதியிலோ காணப்படாமையால் நடைமுறை சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 342,776 தொகைக்கான நன்கொடைத் தொகையால் ஆயுர்வேத இருப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்காமையால் அதே தொகையால் நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 76,603,320 தொகைக்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்பான துணைப் பதிவேடுகளின் பிரகாரம் காணப்படும் மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமின்மைகளில் கூட்டுத்தொகை ரூபா 62,988,304 ஆக இருந்தது.

(ஆ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள பேரேட்டுக் கணக்கு மீதி மற்றும் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 783,704 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 288,833 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நீண்ட காலம் முதல் நிதிக் கூற்றுகளில் மாற்றமின்றி முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 10,053,912 தொகையான பெற வேண்டிய 05 கணக்குகளின் பெறுமதியினை இனங்கண்டு கணக்குகளை தீர்த்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,873,405 இற்கான 04 நிலுவை நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(இ) 2001 ஆண்டு முதல் மாற்றமின்றி முன் கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 571,597 தொகைக்கான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதியினை தீர்த்திருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டு முதல் மாற்றமின்றி முன்கொண்டு வந்த காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 629,665 தொகைக்கான பொதுக் கடன் கொடுத்தோர் மீதி மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 03 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 2,462,916 தொகைக்கான 10 நிர்மாண வேலைகள் தொடர்பான கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்தல் மீளாய்வாண்டின் போதும் மேற்கொண்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 42,898,310 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 6,808,936 தொகைக்கான இருப்புக்கள் தொடர்பாக கணிப்பீட்டு சபை அறிக்கை, பதிவேடுகளும் அட்டவணைகளும், ரூபா 11,224,945 தொகைக்கான கடன்பட்டோர் தொடர்பாக கடன்பட்டோர் பதிவேடும், ரூபா 13,711,478 தொகைகான கடன் கொடுத்தோர் தொடர்பாக கடன் கொடுத்தோர் பதிவேடும், காலப்பகுப்பாய்வும் மீதிகளை உறுதிப்படுத்தல்களும், ரூபா 7,483,404 தொகைக்கான பலவின வைப்புக்கள் தொடர்பாக அட்டவணைகளும் வைப்புக்கள் பதிவேடும், ரூபா 525,390 தொகையான முற்பணங்கள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட முற்பணப் பதிவேடும், ரூபா 1,987,033 தொகைக்கான நிலையான வைப்புக்கள் தொடர்பாக வைப்புச் சான்றிதழ்களும், ரூபா 516,670 தொகைக்கான உத்தியோகத்தர்களிடமுள்ள பணம் தொடர்பாக விரிவான அட்டவணையும், சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திரகரமாக பரிசோதனை செயவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 395 (இ) | ஒவ்வொரு மாதத்திற்கான வங்கி இணக்க கூற்று தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கபட வேண்டுமெனினும் பொதுவான கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் மாத வங்கி இணக்ககூற்று 2017 ஆகஸ்ட் 30 திகதி வரை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணங்கள் 570 | 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் முன் கொண்டுவரப்பட்டுள்ள ரூபா 196,439 தொகைக்கான 05 வகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 22,308,224 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 13,893,961 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 36,202,185 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

## 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுகளின் நிலைமையுடன் மீளாய்வாண்டின் நிலைமையை ஒப்பீடு செய்யும் போது நடைமுறை விகிதாசாரம் மற்றும் விரைவு விகிதாசாரம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என்பதை காட்டியது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீதவரி மற்றும் வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 11,331,510 தொகைக்கான வீதவரியில் ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 770,202 தொகை எனப்படும் 07 சதவீதம் மாத்திரமாகும். 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து அமுல் நடத்துவது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்வில்லை.

### 2.3.2 வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 676,534 இற்கான நிலுவைத் தொகை மற்றும் ரூபா 105,600 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல்களின் 14 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 674,044 தொகையான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 159(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.3 வியாபார வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 200,880 இற்கான வியாபார வரி நிலுவையில் மற்றும் ரூபா 90,460 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல்களில் சுமார் 38 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிலுவை வியாபார வரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152(4) பிரிவின் பிரகாரம் முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 7,178,722 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 31,560,641 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்படும் 11 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2006 ஏப்ரல் 10 திகதி 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணக்கம் இல்லாதவாறு சபையினால் பிரதியீட்டு அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 06 ஊழியர்களுக்கான 2016 ஆண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 1,317,744 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் தொழிலாளர் என சேர்க்கப்பட்டிருந்த 11 ஊழியர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர்களுக்கான கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

### 3.3 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 22 கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகள் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபப/பபகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் எல்லா உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 03 கடைகளுக்கான உடன்படிக்கைகளில் காலவரைகள் குறிப்பிட்டிருக்கவில்லை.

(ஆ) காணிகளை துண்டுகளாக பிரித்து விற்பனை செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றினால் அங்கீகாரம் பெற்றிருந்த 0.7740 இற்கான ஹெக்டர் பரப்பளவை கொண்ட விசாலமான காணியை விற்பனை செய்ததன் மூலம் சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 154(1) இன் பிரகாரம் அந்த காணியை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்கு சமமான வரியை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

சபையினால் 2016 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரத்கம அங் சந்தி 'சரண' இழவு வீட்டுக்கு உதவும் சங்கக் கட்டிடத்தின் ஒரு பகுதியை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக தென்மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 100,000 தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் அத்திவாரத்தை விட வெளிப்பக்கமாக சுமார் இரண்டு அங்குலங்கள் வெளியால் சுவர் கட்டப்பட்டிருந்தமையால் அத்திவாரம் மற்றும் சுவர் இடையே இடை ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத்தின் உறுதித் தன்மை தொடர்பாக கணக்காய்விற்கு சிக்கல்தன்மையாகியுள்ளது.

(ஆ) மலவென்ன மகலாண்டுவ பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 446,030 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருட நிறைவடைவதற்கு முன்னர் பாதை நிறைய கற்கள் வெளிப்பட்டு கற்கள் கலறக் கூடிய நிலையில் காணப்பட்டதுடன், இரண்டு இடங்களில் சுமார் 6 சதுர அடி அளவு பாதை உடைந்து காணப்பட்டது.

### 3.5 செயற்திட்டங்களை தாமதித்தல்

உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அங்கிகரிக்கப்பட்டிருந்த 13 செயற்திட்டங்கள் மற்றும் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த 14 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.

### 3.6 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் விளைவற்று காணப்பட்ட 06 வாகனங்கள் 2015 ஜூலை 10 திகதி 02/2015 இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்காக அல்லது

அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமல், சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2012 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த இரண்டு வாயு சீராக்கி இயந்திரங்கள் இரண்டு வருடங்களை விட மிகையான காலம் முதல் செயற்படாது காணப்பட்டதுடன், அதனை பழுதுபார்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபை நிதியத்தில் இருந்து ரூபா 103,200 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு, 2014 ஆண்டின் போது பொருத்தியிருந்த பாதுகாப்பு கமரா முறைமை 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டது.

## 3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மற்றும் பிலிசரு செயற்திட்டத்தின் உதவியுடன் மொன்ரோச்சியாவத்த காணியில் திண்ம கழிவு பொருள் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் சேதனப் பசளை உற்பத்தி வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமையால் அதற்காக பயன்படுத்திய ரூபா 599,000 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்று சபைக்கு சொந்தமான வாகனத் தளத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபையின் அதிகார பிரதேசத்தில் விநியோகிப்பதற்கு வழங்கியிருந்த 35 குப்பை பாத்திரங்கள் ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் சபைக்கு சொந்தமாக வாகன தளத்தில் வைக்கப்பட்டள்ளது.

# 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 06 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 20,818,575 தொகை சேமிப்புகளும் மேலும் 02 விடயங்கள் ரூபா 236,341 இற்கான பிரதிகூலங்கள் முரண்களும், 06 வருமான விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 23,143,034 தொகைக்கான நெருங்கியிருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 134 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 தீர்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.2 பந்தியின் (ஆ) முதல் (ஏ) வரையான பந்திகள் மூலம் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் வெவ்வேறான விபரங்கள் காட்டக்கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | (i) வாகனங்கள் தொடர்பான விவரங்களை உட்படுத்தி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) சில வாகனங்களை எதுவித தேவைக்கும் பயன்படுத்தாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. |
| | (iv) சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருமான நிருவாகம் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தாமையினால் நிலுவை வருமான மீதி ஒவ்வொரு வருடமும் உயர்ந்த பெறுமதியினை பெற்றிருந்தது. |
| | | (ii) | முத்திரை கட்டண வருமானம் நாளது வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணப்படல் | (i) | கடந்த வருடங்கள் முதல் மாற்றமின்றி முன்கொண்டு வந்து காணப்படும் கணக்கு மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்களில் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்படும் வித்தியாசங்கள் இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சரிசெய்திருக்கவில்லை. |
| | | (iii) | உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த கடன் தவணைகளாக செலுத்துதல் தொடர்பாக விபரங்களை உட்படுத்தி கடன் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | | (iv) | சபையினால் மீளாய்வாண்டு இறுதி வரை பின்வரும் பதிவேடுகள் பேணியிருக்கவில்லை.<br>• சேதங்கள் தொடர்பான பதிவேடு<br>• கடன்கொடுத்தோர் பதிவேடு<br>• கடன்பட்டோர் பதிவேடு<br>• நன்கொடை பதிவேடு<br>• கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| | | (v) | தொங்கல் கணக்குகளின் மீதிகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) | சபைக்காக நிரந்தர பதவியணியை மிகைத்து சேவையில் ஈடுபடுத்தியிருந்த மிகைப் பதவியணி 25 இனை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | இரண்டாம் தர சேவையைச் சேர்ந்த நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பெண் தொழிலாளருக்கு சாட்டப்பட்டிருந்தது. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு விடயமொன்றில் மொத்த ஏற்பாடுகளும், மேலும் 06 செலவு விடயங்களில் கணிசமான சேமிப்பு காணப்பட்டன. |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மிகைத்து இரண்டு செலவு விடயங்களில் உயர்ந்த பெறுமதியில் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | | (iii) | 6 வருமான விடயங்களில் பாதீட்டில் காட்டப்பட்டுள்ள வருமான இலக்கை நெருங்கியிருக்கவில்லை. |
| | | (iv) | செலவுகள் மற்றும் வருமானம் தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாதீட்டை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |